**செ. கு. எண்**: 455 **நாள்**: 21.12.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 21.12.2012

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி நகரம், மகாலிங்கபுரம் அருகே 10.12.2012 அன்று திரு. ராமலிங்கம் என்பவரின் மகள் சரண்யா மிதிவண்டியில் பள்ளிக்கு சென்று கொண்டிருந்த போது அரசுப் பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தாள் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், ஜம்பை கிராமம், இரட்டை காடு அருகே, பவானி – அந்தியூர் நெடுஞ்சாலையில், 11.12.2012 அன்று அந்தியூரியிலிருந்து பவானி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்தும், தனியார் பேருந்தும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில், ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், தவிட்டுப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்துக்கிருஷ்ணன் என்பவரின் மகன் சண்முகசுந்தரம், சென்னம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. மாதையச் செட்டி என்பவரின் மகள் மகேஸ்வரி ஆகியோர் சம்பவ இடத்திலேயேயும், நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம், குள்ளப்பன் நகரைச் சேர்ந்த திரு. கோவிந்தசாமி என்பவரின் மனைவி கமலா, ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், சென்னம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. கணேசன் என்பவரின் மனைவி சாந்தா மற்றும் திரு. பழனிச்சாமி என்பவரின் மனைவி சின்னப்பொன்னு ஆகியோர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றியும் உயிரிழ்ந்தனர் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், பெத்துப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. பொன்னுசாமி என்பவரின் மகன் சுப்பிரமணி 11.12.2012 அன்று கொத்தம்பட்டி கிராமம், துறையூர் - முசிறி பிரதானசாலையில் தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது அரசுப் பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுதையூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. குழந்தைவேல் என்பவரின் மகன் கார்த்திக் 11.12.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் லால்குடி வட்டம், ஆங்கரை கிராமம், திருச்சிராப்பள்ளி – சிதம்பரம் நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த போது அரசுப் பேருந்து மோதியதில் பலத்த

காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், கரியமாணிக்கம் பகுதி, எதுமலை கிராமம் அருகே 17.12.2012 அன்று இரு சக்கர வாகனமும் அரசுப் பேருந்தும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த, ஸ்ரீரங்கம் வட்டம், திருவானைக்கோவில் நகரைச் சேர்ந்த திரு. வீராசாமி என்பவரின் மகன் பிச்சை சம்பவ இடத்திலேயும், துறையூர் வட்டம், கிருஷ்ணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பெருமாள் என்பவரின் மகன் ராமசாமி பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றியும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த சரண்யா, சண்முகசுந்தரம், மகேஸ்வரி, கமலா, சாந்தா, சின்னப்பொன்னு, சுப்பிரமணி, கார்த்திக், பிச்சை மற்றும் ராமசாமி ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், ஜம்பை கிராமம், இரட்டை காடு அருகே, பவானி – அந்தியூர் நெடுஞ்சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் 31 நபர்கள் காயமடைந்துள்ளனர் என்ற செய்தியையும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், ஆங்கரை கிராமம், திருச்சிராப்பள்ளி – சிதம்பரம் நெடுஞ்சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் மருதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. மணிவேல் என்பவரின் மகன் ஜெகன் காயமடைந்துள்ளார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**